1981 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே கேள்வியை இரண்டு முறை கேட்பதில் இருந்து அதனுடைய முக்கியத்துவம் தெரிகின்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இது நீதி மன்றத் தீர்ப்பின்படி அந்த உயரம் குறைக்கப்பட்டிருப்பதாக நமக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அதை கவனத்திலே கொண்டு இது நீதி மன்றத் தீர்ப்பாக இருக்கிற காரணத்தினாலே வேறு எந்த வகையில் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை நிச்சயமாக ஆலோசனை செய்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விளாத்திக்குளத்தில் அக்ரோ சர்வீஸ் செண்டர் நிறுவும் திட்டம்

* வினா எண். 77—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திக்குளத்தில் அக்ரோ சர்வீஸ் செண்டர் அமைக்க அரசு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) தற்போது இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் 300-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சிறு விவசாயிகள் வாழ்கின்றார்கள். எனவே அங்கே ஒரு சர்வீஸ் செண்டர் ஆரம்பித்தால்தான் அங்கே உள்ள விவசாயிகள் டீசல் பெறுவதற்கும் உழுவதற்குக் கலப்பைகள் பெறுவதற்கும் இலகுவாக இருக்கிற காரணத்தால் மீண்டும் அரசு பரிசீலனை செய்து சர்வீஸ் செண்டர் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே இயங்கி வருகின்ற இந்த வேளாண் பொறியியல் கூட்டுறவு பணி மையங்களிலே சில நட்டத்திலே நடந்து வருகின்றன. எனவே அவைகளை எல்லாம் லாபத்திலே நடப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தீவிரமாக எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி விளாத்திகுளத்திலே நிறைய கிராமங்கள் இருக்கலாம். 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புதூர் வேளாண் பொறியியல் மையத்திலே எல்லா வசதிகளும் இருக்கின்றன. அதை அவர்கள் பயன்படுத்துவார்களானால் தற்காலிகமாக அங்கே விவசாயிகளுக்கு ஏதாவது சேவை செய்ய முடியும் என்கின்ற பிரச்சினை எனக்கு எழுந்திருக்கிறது. அதையும் மீறி தேவைகள் அதிகமாக இருக்குமானால் நட்டத்திலே இயங்கிக் கொண்டு இருக்கின்ற அந்த

மையங்களை சரி செய்ததற்குப் பிறகு கூடுதலாக ஏதாவது மையங்கள் ஆரம்பிக்கின்ற சூழ்நிலை வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசிலனை செய்யும்.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவர் அவர்களே, புதூர் 12 மைல் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் என்னுடைய தொகுதி 70 மைல் நீளமும் 30 மைல் அகலமும் கொண்ட ஒரு தொகுதி. 300-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே நெல்லை மாவட்டம் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அரசு பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் இந்த சலுகையை வைத்து, விவசாயிகளுக்கு இலாப நோக்கம் பார்க்காமல் உடனடியாக இந்த ஆண்டே ஏற்பாடு செய்து நிதி ஒதுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இது 12 மைல் அல்ல. 12 கிலோ மீட்டர் தான். ரொம்பவும் அருகாமையில் இருக்கின்றது. இருக்கிற சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேவைகள் அதிகமாக இருந்தால் ஆரம்பிப்பது பற்றி அரசு யோசிக்கும்.

தென்னாற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை.

*வினா எண். 78—திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை விஸ்தரிப்பு பணி நடைபெறுகிறதா ?

(ஆ) ஆம் எனில் அத் திட்டம் எப்போது முடிந்து உற்பத்தியை துவங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்,

(ஆ) இப்பணி இவ்வாண்டுக்குள் முடிக்கப்பட்டு உற்பத்தி தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஸ்தரிப்புத் திட்டம் மாநில அரசு நிதியில் கட்டப்படுகிறதா அல்லது மத்திய அரசு நிதி உதவியுடன் கட்டப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டதிற்கான மதிப்பு ஏறக்குறைய 150 லட்சம் ரூபாய். இதிலே விவசாய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மூலதனக் கடனாக 51.45 லட்சம் அனுமதித்திருக்கிறது. 51.45 லட்சம் மாநில அரசால் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் 90 இலட்சம் ரூபாய் தொழில் நிதி உதவிக் கழகத்திற்கு கடனாகப் பெற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த 13,760 கதிர்களைக் கொண்டு இயங்குகிற இந்தக் கூட்டுறவு நூற்பாலை 25.000 ஸ்பின்டில்கள்—கதிர்கள் கொள்ளளவாக மாற்றுவதற்கான விரிவாக்க வேலைகள் நடந்து வருகின்றன.